மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

08.10.2022 சனிக்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

# நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்க சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டும் எனவும் அதற்கு சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவது அவசியமானது என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அனைத்து அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களின் ஊடகச் செயலாளர்களுக்கு அரச தொடர்பாடல் பொறிமுறை தொடர்பில் அறிவிக்கும் செயலமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஊடகங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தான் பேசியது போதும் என்றும் தான் கூறுவதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் என்ன செய்கிறது என்பதை நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். தாம் மிகவும் கடினமான காலங்களில் இருக்கிறோம் என்றும் அதிலிருந்து மீண்டு வருகின்றபோதிலும் பலர் நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் என்ன செய்கிறது என்பதை அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சரியான தகவல்களை வழங்குவதன் மூலம் நாட்டில் ஸ்திரத்தன்மையை கொண்டு வர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றைய மிகப்பெரிய பிரச்சினை மின்னணு ஊடகங்களோ அல்லது அச்சு ஊடகங்களோ அல்ல என்றும் சமூக ஊடகங்களே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் 25 வது தேசிய மாநாடு மகாரகம் இளைஞர் சேவை மன்றத்தில் மிகப் பிரமாண்டமாக சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜெயசிங்க தலைமையில் நடைபெற்ற போது..

## பரீட்சைகள் நடத்தும் திகதிகளில் மாற்றம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியன பிற்போடப்பட்டுள்ளன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

## நாமலுக்கு மேலுமொரு புதிய பதவி

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காணும் தேசிய பேரவையின் உப குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். உபகுழுவின் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் முன்மொழிந்ததாகவும் அமைச்சர் அலி சப்ரி அதனை உறுதிப்படுத்தியதாகவும் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02

## ஐ.நா.வின் வாக்குறுதிகளை கடைப்பிடிக்காமையே இலங்கை ஆதரவை இழந்துள்ளது

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



இலங்கைக்கு முன்னைய அமர்வுகளில் வழங்கிய வாக்குறுதிகளை நாடு கடைப்பிடிக்காத காரணத்தினாலேயே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தனது ஆதரவை இழந்தது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார். கட்டார் மற்றும்

02

## திருத்தச் சட்டங்களெல்லாம் விருப்பங்களுக்காகவே அன்றி மக்களுக்காகக் கொண்டு வரப்படுவதில்லை

### பாராளுமன்ற உறுப்பினர் -கோ.கருணாகரம் (ஜனா)

(ரக்ஸனா)



பாராளுமன்றத்தில் வருகின்ற திருத்தச் சட்டங்களெல்லாம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அல்லாமல் ஒரு சிலரது, ஒரு சில கட்சிகளது விரும்பங்களை நிறைவேற்றுவதற்காகவே கொண்டு வரப்படுகின்றன. அந்த அடிப்படையிலேயே 22வது திருத்தச்சட்டத்தின் விவாதமுமும் பிற்போடப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார். வெள்ளிக்கிழமை (07) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் நேற்றைய உரை மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

22வது திருத்தச் சட்டம் தொடர்பாக விவாதிக்க வேண்டிய இந்த நேரத்திலே ஜனாதிபதி அவர்களின் உரை சம்மந்தமான ஒத்திவைப்புப் பிரேரணையிலே பேசுகின்றோம். 22வது திருத்தச் சட்டம் ஒரு சிலரின் விருப்பதைப் பூர்த்தி

02




## கணவன் மனைவியை அடித்து கொலை

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதியில் 60 வயதுடைய வயோதிபர் ஒருவர் தனது மனைவியை அடித்து கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய சம்பவம் நேற்று (07) இரவு 8 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். ஆரையம்பதி, மாவிலந்துறயைச் சேர்ந்த 60 வயதுடைய 7 பிள்ளைகளின் தாயாரான நவரெத்திணம் சோதிமலர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பிள்ளைகள் அனைவரும்

02

## ஒக்டோபர் 10 விசேட விடுமுறை

ஒக்டோபர் 10 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆம் ஆண்டுக்கான வங்கி விடுமுறை நாட்களைக் காட்டும் குறிப்பில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் என்பதன் காரணமாக இந்த விடுமுறை திங்கட்கிழமை வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ஒக்டோபர் 10 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாமலுக்கு மேலுமொரு புதிய பதவி

பொது நிர்வாகம், சுகாதாரக் கொள்கைகள், கல்விக் கொள்கைகள், மீன்வளம் மற்றும் உணவுக் கொள்கைகள், மின்சாரம் மற்றும் எரிசக்திக் கொள்கைகள், காலநிலை மாற்றக் கொள்கைகள் மற்றும் தொழில் முனைவோர் கொள்கைகள் ஆகியவற்றைச் சீர்திருத்துவது தொடர்பான யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற, அந்தத் துறைகளின் நிபுணர்களை துணைக் குழுவின் முன் அழைக்க, குழுவின் உறுப்பினர்கள் இதன்போது ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த யோசனைகள் மற்றும் பரிந்துரைகளின்படி, ஒரு மாதத்திற்குள் குறுகிய கால முன்மொழிவுகள், மத்திய காலப் பிரேரணைகளை இரண்டு மாதங்களுக்குள்ளும் நீண்ட காலப் பிரேரணைகளை மூன்று மாதங்களுக்குள்ளும் தேசிய பேரவையில் சமர்ப்பிக்க உபகுழு உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ.நா.வின் வாக்குறுதிகளை கடைப்பிடிக்காமையே..

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய இரண்டு நாடுகளும் கணிசமான அந்நிய செலாவணியில் பங்களிக்கும் நேரத்தில், குறிப்பாக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அதிகம் அனுப்பும் சூழலில் இலங்கைக்கு ஆதரவை காட்டவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் ஆசிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பது பொதுவான மரபு எனவும் எனினும் இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள்கூட வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஏன் நடக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்றும் ஆணித்தரமான வாக்குறுதிகளை நாம் இலகுவாக எடுத்துக்கொண்டு அவற்றை மீறுவதே முக்கிய காரணம் என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.



கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா பாலர் பாடசாலையில் 2022.10.06 ம் திகதி சர்வதேச சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினம் தலைவர் ஆ .தனுஷ்கரன் தலைமையில் இடம்பெற்ற போது...

## திருத்தச் சட்டங்களெல்லாம் விருப்பங்களுக்காகவே அன்றி

செய்யாததமையினாலே அது இன்று சபைக்குக் கொண்டுவரப்படவில்லை எனக் கருதுகின்றேன். இதேபோல் தான் மாறி மாறி இந்த நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் தங்களது தேவைக்காக அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றார்கள். இந்த அரசியலமைப்பில் 44 வருட காலத்திலே 2வது திருத்தச் சட்டம் முன்னாள் மட்டக்களபப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜதுரை அவர்களை அரச தரப்பிற்கு எடுப்பதற்காக அவரது உறுப்புரிமையைப் பறிப்பதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமாக இருக்கின்றது. 3வது திருத்தம் ஒரு ஜனாதிபதி ஆறு வருடங்கள் ஆட்சியில் இருக்கலாம் என்பதை மாற்றி அவரது ஆட்சிக் காலத்திலே நான்கு வருடத்தினுள் தேர்தலை நடத்தலாம் என்று கொண்டு வரப்பட்டது. 6வது திருத்தச் சட்டம் அப்போதைய தமிழர் விடுதலைக கூட்ணியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்களை இந்தச் சபையில் இருந்து துரத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டது. 13வது திருத்தச் சட்டம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமாகப் பிறப்பிக்கப்பட்ட குழந்தை, 18வது திருத்தச் சட்டம் மஹிந்த ராஜபக்ச அவர்களின் அதிகாரத்தைப் பலப்படுத்தக் கொண்டு வரப்பட்டது. 19வது திருத்தச் சட்டம் ராஜபக்ச குடும்பத்தை மையப்படுத்தி அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது. 20வது திருத்தச் சட்ட மீண்டும் கோட்டபாய ராஜபக்சவின் அதிகார வெறிக்கு உரமூட்டிய சட்டம்.

ஆக மொதத்தில் இங்கு வருகின்ற திருத்தச் சட்டங்களெல்லாம் ஒரு சிலரது, ஒரு சில கட்சிகளது விரும்பங்களை நிறைவேற்றுவதற்காகத் தான் கொண்டு வரப்படுகின்றன. அதேபோல் தான் 22வது திருத்தச் சட்டமும் இந்தச் சபையிலே விவாதிக்கப்பட வேண்டிய நிலையிலே ஒரு சிலருக்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படாமல் இருக்கின்றது. இந்தத் திருத்தச் சட்டங்களிலே பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஒன்றுதான் இலங்கையில் மக்களின் பிரச்சனைகளை ஓரளவேனும் தீர்ப்பததற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். நாங்கள் அதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவ்வாறு இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தைக் கூட இந்த நாட்டின் அரசுகள் அரசிலமைப்பினை மீறி கையாளுகின்றன. 13வது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் கூட இன்றுவரை முழுமையாக வழங்கப்படாமல் மாறி மாறி ஆண்டுகொண்டிருக்கும் ஆட்சியாளர்களால் அரசியலமைப்பு இன்றுவரை மீறப்படுகின்றது.

ஜனாதிபதி அவர்களின் நேற்றைய உரை நாட்டின் யதார்த்தத்தைப் பிரதிபலித்தது. இன மத மொழி பேதமின்றி கட்சி அரசியல் பேதமின்றி நாடாக ஒன்றிணைய வேண்டும் என்ற தொனி அவரது உரையில் தெரிந்தது. அதனை முழுமையாக நாங்கள் ஏற்கின்றோம். ஆனால் எமது ஒத்துழைப்பு உங்கள் காரியங்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரமா? என்கின்ற ஐயத்துடனான கேள்வி எங்களுக்குள் எழுகின்றது. நாட்டின் தலைமை வகித்தவர்களில் நல்லவராகக் காட்டக் கூடியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதில் எனக்கு ஐயமில்லை. அவர் ஜனாதிபதியாக வந்தமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும், அவர் ஜனாதிபதியாக வந்தது அரசியலமைப்பின் அடிப்படையிலேயே என்பதில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. ஆனால், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத் தேர்தல் வரலாற்றை உணர வேண்டும். கடந்த நல்லாட்சி என்ற அரசின் காலத்தில் நடந்த அரசியல் கோமாளித் தனத்தை உணர வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் உங்கள் பக்கமே எம் தமிழர்கள் இருந்தார்கள். 2010, 2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் தற்போதைய ஜனாதிபதி இருந்த பக்கமே எமது தமிழ் மக்கள் இருந்தார்கள். அது நாட்டைப் பிளவுபடுத்த அல்ல சுபீட்சப்படுத்தவே.

நல்லாட்சிக் காலத்தில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த செயலுக்காக அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் ஒத்துழைத்து உங்களை மீண்டும் பதவியில் அமர்த்தியதில் கூடுதல் பங்காற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. இந்த வரலாற்றை நீங்கள் என்றும் மறக்கக் கூடாது. உங்களது கடந்த கால வரலாற்றின் துயரங்கள் இனிமேலும் தொடரக் கூடாது. இந்த நாட்டில் புதிய அத்தியாயத்தைப் படைக்கக் கூடிய சுபீட்சத்தை ஏற்படுத்தக் கூடிய ஏன் உங்களது நீண்ட கனவு கூட இன்று நிறைவேறியுள்ளது. எனவே நிதானமாகச் செயற்படுங்கள். எமது நாட்டின் வரலாற்றில் போற்றப்பட வேண்டியவராக இருக்க வேண்டுமென்றால் இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைக்கு முக்கியமான காரணமாகவுள்ள புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சனைக்குத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வைத் தாருங்கள்.

இன்று ஐநா மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்றி அவர்கள் வீரவசனங்கள் பேசிக் கொண்டிருக்கின்றார். இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் இலங்கைக்கு ஆதரவாக ஏழு நாடகளே ஆதரவு தெரிவித்திருக்கின்றன. அவை எந்த நாடுகள் சீனா, பாக்கிஸ்தான் போன்றவை. இந்த நாடுகளில் ஜனநாயகம் இருக்கின்றதா என்பதைப் பாருங்கள். இலங்கைக்கு எதிராகவுள்ள நாடுகளைப் பாருங்கள் அமெரிக்கா பிரித்தானியா போன்ற ஜனநாயகம் நிரம்பிய நாடுகள். அந்த நாடுகளிலே பல்மொழி பேசுகின்ற பல இன மக்கள் வாழுகின்றார்கள். அந்த மக்களுக்கான அதிகாாரங்கள் பரவலாக்கபட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த நாடுகள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று இந்த நாடும் முன்னேற வேண்டுமானால் உங்களிடையே நல்லெண்ணம் உருவாக வேண்டும். பிரேரணைக்கு நடுநிலை வகித்த இந்தியாவைப் பின்பற்றிய நாடுகள் என்ன சொல்லுகின்றன. 13வது திருத்தச் சட்டத்தை முழு அதிகாரத்துடன் நிறைவேற்றுங்கள், மாகாணசபைத் தேர்தலை நடாத்துங்கள் என்றே கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் மக்கள் சபையொன்று இல்லாமல் இருக்கின்றது. மாகாண ரீதியில் இருக்கின்ற தொல்பொருள் திணைக்கம் மதவாதம், இனவாதம் கொண்டதாகவே இருக்கின்றது. கடந்த கோட்டபாய ஆட்சியிலே கிழக்கு மாகாணத்திலே உருவாக்கப்பட்ட தொல்பொருள் செயலணி என்ன செய்து கொண்டிருக்கின்றது. இந்தத் தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக எமது இந்து மதப் பாரம்பரிய புராதனச் சின்னங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இங்கே முன்னாள் அமைச்சர்கள் நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்களுக்கு இரத்தம் கொடுத்ததாக முன்னாள் அமைச்சர் கடந்த பாராளுமன்றத்திலே பேசியிருந்தார். ஆனால், அவர் எத்தனை தமிழர்களின் இரத்தங்களை வெளியில் எடுத்தவர் என்பது அனைவருக்கும் தெரியும். தொல்பொருளுக்குப் பொறுப்பான அமைச்சர் கூறுகின்றார் எதுவும் நடக்காது என்று. ஆனால், தொல்பொருள் திணைக்களத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவினால் உருவாக்கப்பட்ட வியத்மக அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்த சரத் வீரசேகர போன்றவர்கள் வியத்மக அமைப்பில் இருந்து கொண்டு சம்மந்தப்படட அமைச்சருக்கே தெரியாமல் தொல்பொருள் திணைக்களத்துடன் தொடர்புகளை வைத்தக் கொண்டு இவ்வாறான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களிலே எமது உயிர்நீத்த உறவுகளை நாங்கள் நினைவு கூருகின்ற போது போராட்ட வரலாற்றிலே இருந்த விமல் வீரவன்ச அவர்கள் புலிப்பயங்கரவாதிகளை நினைவு கூருகின்றார்கள். அவர்களைக் கைது செய்யச் சொல்லுகின்றார். ஆனால், அவரது தலைவர் ரோகண விஜயவீர உட்பட அவர்களது தோழர்கள் இறந்தமையை அவர்கள் இன்றும் நீனைவுகூர்ந்து வருகின்றார்கள். ஆனால், எமது விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவு கூருபவர்களை கைது செய்யச் சொல்லுகின்றார்கள். இன்று பாராளுமன்றத்திலே கேள்வி பதில் விடயத்திலே ரோகண விஜயவீர அவர்கள் கடந்த 1989.12.12ம் திகதி பிடிபட்டதாகவும், 13ம் திகதி கொல்லப்பட்டதாகவும் அதற்கு யாரும் விவாசரணை கேட்கவில்லை என்று தோழர் விமல் விரவன்ச தெரிவித்தார். அவரிடம் நான் கேட்கின்றேன் அப்போது ரோகண வியஜயவீரவுடன் இருந்த நீங்கள் தான் அதற்கு நீதி கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## கணவன் மனைவியை அடித்து கொலை

திருமணம் முடித்து வேறு பிரதேசத்தில் வாழ்ந்துவருவதுடன் கணவனும் மனைவியும் தனிமையில் வாழ்ந்து வரும் நிலையில் இருவருக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டுவதுடன் கணவன் மனைவியைவிட்டு வீட்டை விட்டு வெளியேறி கடந்த ஒரு மாதகாலமாக கல்லாறு பிரதேசத்தில் இருந்துள்ள நிலையில் சம்பவதினமான நேற்று அவரை தேடி மனைவி சென்று சமாதானம் பேசி அழைத்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று இரவு 8 மணி அளவில் மனைவியை அடித்து கொலை செய்துவிட்டு கணவன் தப்பி ஓடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சிகுடிச்சாறு மக்களுக்கு காணி ஆவணம்



**( வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தை சேர்ந்த 75பேருக்கு காணி ஆவணப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு ,திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று(07) திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தில் காணிஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் மக்களுக்கு இவ் காணி ஆவணங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் , திருக்கோவில் பிரதேச செயலக சிரேஷ்ர நிருவாக உத்தியோத்தர் ரி. மோகனராஜன், காணி உத்தியோகத்தர்களான பி.கோவிந்தசாமி, திருமதி.ரி.லோஜினி, திருக்கோவில் பிரதேச செயலக நிருவாகபிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோத்தர் ரி.சசிந்திரன், திருக்கோவில் பிரதேச செயலகத்தின் காணிப்பிரிவு உத்தியோத்தர்கள் ,கிராம சேவையாளர்கள் கிராம சங்க உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் இன் நிகழ்வில் கலந்து கொண்டு இவ் தெரிவு செயப்பட்ட மக்களுக்கு காணி ஆவணப்பத்திரங்கள் வழங்கி வைத்தனர். கிழக்கு மாகாணத்தில் காணி ஆவணம் வழங்கும் திட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகம் முன்னணியில் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

## களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடைபெற்ற “விளையாடி மகிழ்வோம்” சர்வதேச சிறுவர்தினக் கொண்டாட்டம்





**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தினால் ‘விளையாடி மகிழ்வோம்” சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம் 2022.10.07 வெள்ளிக்கிழமை மாலை ஓந்தாச்சிமடம் கடற்கரையில் பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், 100 வயதை பூர்த்தி செய்த களுவாஞ்சிகுடி வடக்கு,01 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த திருமதி. சங்குபதி தங்கராசா அவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் சிறுவர்களின் போசாக்கு, ஆரோக்கிய நிலையை மேன்படுத்தல், உளவியல் ரீதியாக அபிவிருத்தி செய்து ஒழுக்க நெறிமிக்க சிறந்த சமூகத்தை உருவாக்குதல், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களில் இருந்து சிறுவர்களை பாதுகாத்தல் போன்ற விடயங்கள் இங்கு வலியுறுத்தப்பட்டன. இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி.புவனேஸ்வரி ஜீவகுமார், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார், எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பா.துரைராசசிங்கம், மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந்தமோகன், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிந்திரன், சிறுவர் மேன்பாட்டு உத்தியோகத்தர், கே.கருணாகரன், கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.ஞானசிறி, சமூக அபிவிருத்தி உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து |Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ| 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கிழக்கு பல்கலைக்கழகத்தோடு சினேகபூர்வ கலந்துரையாடல்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திப்பணிகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உயர் கல்வி நிறுவனமான கிழக்கு பல்கலைக்கழகத்தோடு இணைப்பு செய்து அதனை மென்மேலும் எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது தொடர்பிலான சினேகபூர்வ கலந்துரையாடல் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வைத்தியகலாநிதி என்.பஞ்சநாதம், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளைநாயகம், இசை நடன கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி.பாரதி கெனடி, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது மட்டக்களப்பின் சரித்திரம் கூறும் வீ.சி.கந்தையா எழுதிய மட்டக்களப்பு தமிழகம் எனும் வரலாற்றுப் பொக்கிஷ நூல் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினால் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வைத்தியகலாநிதி என்.பஞ்சநாதம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு துணைவேந்தர் பேராசிரியர் என்.பஞ்சநாதம் விஜயம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக உத்தியோகத்தர் மேம்பாட்டு நிலையத்தின் இணைப்பாளராகிய கலாநிதி ஜயந்தினி விக்னராஜனின் ஏற்பாட்டில் பணிப்பாளரின் அழைப்பின் பேரில் தமிழ் நாட்டு ஆசிரியர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.பஞ்சநாதம் நிறுவகத்திற்கு வருகை தந்து "சமகால சூழலில் பட்டதாரி மாணவர்களின் மனப்பாங்கினை புரிதல்" என்னும் தலைப்பில் வளவாண்மை மேற்கொண்டிருந்தார்.

அவரை நிறுவக கல்விசார் உத்தியோகத்தர்கள் மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி வரவேற்றதுடன், வளவாளராக வருகை தந்த பேராசிரியர் என்.பஞ்சநாதம் அவர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதன்பின் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு சென்ற துணைவேந்தர் பணிப்பாளரின் சேவையை பாராட்டி பணிப்பாளருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்திருந்தார்.

இச்செயலமர்வில் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமை வகித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், நிறுவகத்தின் அனைத்து சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், திருமலை வளாக பீடாதிபதி மற்றும் பிற துறை சார்ந்தவர்களும் இச்செயலமர்வில் கலந்து சிறப்பித்துள்ளனர். இச்செயலமர்வானது சுவாரசியமாகவும், கலந்துரையாடலாகவும், அறிவு பூர்வமானதாகவும் அமைந்ததுடன், இறுதியாக பேராசிரியர் அவர்களுக்கு பணிப்பாளர் புளோரன்ஸ் பாரதி கென்னடி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு அருள்மிகு ஸ்ரீ திரௌபதை அம்பாள் ஆலய வருடாந்த தீப்பள்ளய தீமிதிப்பு வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை(7) மாலை இலட்சக்கணக்கான மக்களின் முன்னிலையில் இடம் பெற்ற போது ...
படங்கள் : வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு. மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95



NATURE GROWERS

இயற்கை முறை (நஞ்சற்ற) விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவது மட்டுமல்லாது இயற்கைமுறை (நஞ்சற்ற) விவசாயத்தின் நன்மைகளை மக்களுக்கு அறியப்படுத்துவதும் ஆரோக்கியமான உணவை வழங்குவதும் எமது நாட்டின் உணவுப்பற்றாக்குறை மற்றும் உணவுப்பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவதே NGC யின் நோக்கமாகும்.

இயற்கை முறை விவசாயத்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட 700 விவசாயிகளை கொண்டு உருவாக்கப்பட்டதே "நேச்ச குறோவர்ஸ் சேக்கிள்" நிறுவனமாகும்.

வாகரை, வாழைச்சேனை, ஏறாவூர்ப்பற்று மற்றும் கிரான் மண்ணிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன கலப்படமற்ற தூய இயற்கைமுறை உற்பத்திகளை சந்தைப்படுத்த ஆரம்பித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தரமான உற்பத்திகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட (Certifed) விவசாயிகளிடமிருந்து பெறப்படுகின்றன (Organic Certificate PGS From Good Market Sri Lanka)



எம்மிடமிருந்து
- இரசாயண கலப்படமற்ற உள்ளூர் மரக்கறிகள் மற்றும் கீரை வகைகள்
- இயற்கை உரம் (கூட்டுப்பசளை)
- திரவப்பசளைகள் (IMO, இலைக்கரைசல், பழக்கரைசல், மீன் கரைசல், கல்சியம், கல்சியம் பொஸ்பெயிட், இஞ்சிக் கரைசல்)
- தானியங்கள் (பயறு,கௌப்பி,உழுந்து)
- இஞ்சி,மஞ்சள்
- பழவகைகள்

கிடைக்கக்கூடிய இடங்கள்
- மட்டக்களப்பு விற்பனை நிலையம் (Batticaloa Outlet) மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு அருகில்.
- காத்தான்குடி விற்பனை நிலையம் (Kattankudy Outlet) - குட்பின் சந்திக்கு அருகில்.
- ஏறாவூர் பற்று, செங்கலடி விற்பனை நிலையம் & கரடியனாறு சேகரிப்பு நிலையம்.
- கிரான் சேகரிப்பு நிலையம்.
- வாழைச்சேனை விற்பனை நிலையம்
- பால்சேனை (வாகரை)சேகரிப்பு நிலையம் & பால்சேனை விற்பனை நிலையம், கதிரவெளி விற்பனை நிலையம்.

உள்ளூர் உற்பத்திகள்
- தேங்காய் எண்ணெய் (உருக்கெண்ணெய் /சமையல் எண்ணெய்)
- மிளகாய்த்தூள்
- மஞ்சள்தூள்

மேலதிக ஓடர்களுக்கு,
முகாமையாளர்,
நேச்ச குறோவர்ஸ் சேக்கிள்,
கும்புறுமூலை, வாழைச்சேனை.
தொ. இல. 074-0210489.

"ஒவ்வொரு கொள்வனவும் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்"

நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# மருதமுனை ஷம்ஸ் - அல்-மனார் பழைய மாணவர்கள் ஏற்பாட்டில் மாபெரும் விளையாட்டு விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை வரலாற்றில் முதல் தடவையாக மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மற்றும் அல்–மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) களில் கல்விகற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ''கடினமாக விளையாடுங்கள் உண்மையாக இருங்கள்" (டயல ாயசன எவயல வசரந) எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியும் நாளை சனிக்கிழமை (2022.10.08) காலை 7.30 மணிக்கு மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் 1997, 1998 ஆம் ஆண்டுகளில் சாதரணதரப் பரீட்சைக்கு தோற்றிய பழைய மாணவர் அணிகளும் – அல்–மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் 1997. 1998 ஆம் ஆண்டுகள் சாதரணதரப் பரீட்சைக்கு தோற்றிய பழைய மாணவர் அணிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பரிசளிப்பு நிகழ்வின் போது வெற்றி பெறும் அணிகளுக்கான சம்பியன் கிண்ணம் மற்றும் விசேட திறமைகளை வெளிப்படுத்தும் வீரர்களுக்கான சிறப்பு பரிசில்களும் மருதமுனை 'முஹம்மட் மென்ஸ்வெயா' அனுசரணையில் வழங்கி வைக்கப்படவுள்ளன. வரலாற்று சிறப்புமிக்க இவ் விளையாட்டு விழாவினை கண்டு களிப்பதற்கு விளையாட்டு ரசிகர்கள் அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைக்கின்றார்கள்.

# கிண்ணியம பிரதேசத்தில் க்ரேன் பியஸ்டா கார்னிவேல்



சில்மியா யூசுப்

குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கிண்ணியம பிரதேசத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 30,01,02, ஆம் திகதிகளில் க்ரேன் பியஸ்டா கார்னிவேல் மிக பிரமாண்டமான முறையில் இடம் பெற்றது. இதில் கிண்ணியம பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளோடு ஏனைய கண்காட்சி நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வானது கிண்ணியம சமூக சேவை கூட்டமைப்பு வாலிபர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதோடு ஊர் முக்கியஸ்தகர்களும் அர்களது பங்களிப்பை வழங்கி இருந்தனர். மேலும் இதற்கு பாதுகாப்பு உதவியாக சிலாப பொலிஸ் உயர் அதிகாரி மௌசூன் உதவியோடு பிங்கிரிய , பொலிஸ் அதிகாரிகளால் பல பலமான பாதுகாப்பு வழங்கப்பட்டு சிறப்பான முறையில் நடை பெற்றது. அத்துடன் சுமார் 5000 ற்கு மேற்பட்ட மக்கள் பல பிரதேசத்திலிருந்தும் வருகை தந்து இந்நிகழ்வுகளை கண்டுகழித்தனர் என்பது குறிப்பிடதக்க விடயமாகும்.

# ஹெரோயின் போதைப்பொருள் பிரதான முகவர் கைது



பாறுக் ஷிஹான்

ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து வெள்ளிக்கிழமை (7) அதிகாலை 2.30 மணியளவில் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை மதிரஸா வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனைகுடி பகுதியை சேர்ந்த 34 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 7 கிராம் 870 மில்லிகிராம் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான திசாநாயக்க (53534) கண்டப்பகல (75492) பொலிஸ் கன்டபிள்களான பெரேரா (71664) அபேரட்ன (75812) நிமேஸ்(90699) சாரதி ஜெயரட்ன (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தில் தொடர்பு பட்ட சந்தேக நபர் இப்பிராந்தியத்தில் போதைப்பொருள் பிரதான முகவராக செயற்பட்டு வந்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# குண்டெறிதல் போட்டியில் வாழைச்சேனை அந்நூர் மாணவன் தேசிய மட்டத்திற்கு தெரிவு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மாணவன் ஏ.ஆர்.ஏ.அய்மன் குண்டெறிதல் போட்டியில் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர் தெரிவித்தார். 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய போட்டியில் குறித்த மாணவன் 12.79 மீற்றர் தூரம் குண்டெறிந்து இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன் அய்மனுக்கும் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் ஆர்.அலோஜிதன், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் திரு பிரதீப் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி



(அ . அச்சுதன்)

2022 ஆம் வருடத்திற்கான வலய மட்ட அழகியற் கலைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியானது திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் அவர்களது தலைமையில் நேற்று மாலை 2.30 மணியளவில் தி/ புனித சவேரியார் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்விற்கு தக்கநகர், தேசிய கல்வியல் கல்லூரி அதிபர் சதாசிவம் பவானந்தம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

# ஊடகவியலாளர் சியாத்.எம். இஸ்மாயிலுக்கு கௌரவம்



நூருல் /ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத்தினால் கடந்த 2005 ஆண்டு தொடக்கம் 2011 ஆண்டு காலப்பகுதிகளில் திட்ட உத்தியோகத்தராகச் சேவையாற்றிய அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான சியாத். எம். இஸ்மாயில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரினால் ஞாபகச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத்தின் தவிசாளர் வி.பரமசிங்கம் தலைமையில் அட்டாளைச்சேனை தனியார் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போதே இக் கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது. இன் நிகழ்வில், அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீஸன், சம்மாந்துறை மற்றும் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர்களான எஸ்.எல்.எம். ஹனிபா, வி.பபாகரன் மற்றும் அம்பாரை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், நிறுவன பிரதிநிதிகள், புத்திஜிவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்ச்சி



(எம்.என்.எம்.அப்ராஸ்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு , கல்முனை பிரதேச செயலகத்தின் கல்முனைக்குடி சமுர்த்தி வலயத்தின் இஸ்லாமாபாத் பிரிவின் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளின் ஏற்பாட்டில் “புன்னகை கானும் எமது உலகம்” எனும் தொனிப் பொருளில் சிறுவர் தின நிகழ்வுகள் இஸ்லாமாபாத் சிறுவர் பூங்கா வளாகத்தில்,(கல்முனை) 2022.10.07 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கல்முனைக்குடி வங்கி வலய முகாமையாளர் எம்.புவிராஜ் அவர்களின் ஒருங்கிணைப்பில், இஸ்லாமாபாத் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.அர்சுதீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ். எம்.சப்ராஸ்,விஷேட அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அவர்களும்,கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலக தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலீஹ்,இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.சி.எம்.றிசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.






Main Sponsor — MUBARAK TEXTILES
Co Sponsor — AZEEF FANCY
Official Sraee Blouse Partners — Mahalaxmi Boutique, RS Designer
Official Photography & Videography — INNOVO STUDIO
Official Sraee Florist Partner — Shan Party professionals

Media Partner — தினகரன், Daily News, SUNDAY OBSERVER, வசந்தம் TV, வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.


50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.


**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..


## அழகுக்கலை நிபுணர்கள்




## கேக் வடிமைப்பாளர்கள்








# நூற்றி ஐம்பதாவது நாளில்

# மட்டு நியாய நடை

மட்டுநகரின் காந்தி பூங்காவை மையமாகக் கொண்டு நடைபெற்று வரும் நியாய நடைச் செயற்பாடுகள் நூற்றி ஐம்பதாவது நாளை எதிர்வரும் சனிக்கிழமை (08.10.2022) எட்டுகின்றது. நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுகளால் உருவான அசாதாரண சூழ்நிலைகளில் சாதாரண பொது மக்களின் நலன்களை முன்னிறுத்தி அனைவருக்கும் நியாயத்தை வலியுறுத்தி கலையாக்க வழிமுறைகளுடாக அரசியல், பொருளாதார, மனிதாபிமான நடவடிக்கைகளை மீளக்கட்டி எழுப்புவதற்கான பரிந்துரைகளையும், அதுசார்ந்த கலந்துரையாடல்களையும் வலுவூட்டும் நோக்குடன் நியாய நடைச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தினமும் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் இறக்கத்திலுள்ள புனித செபஸ்தியார் ஆலய முன்றலிலிருந்து முற்பகல் 9:00 மணியளவில் ஆரம்பித்து காந்தி பூங்கா வரை இடம்பெறும் நியத்திற்கான நடை இச்செயற்பாட்டின் முக்கிய ஆற்றுகையாக இடம்பெற்று வருகின்றது. எவருக்கும் இடையூறின்றி, நியாயத்தை வலியுறுத்தும் தன்னார்வலர்கள் பலர் இந்நடை பவனியில் பங்குபற்றி வருகின்றார்கள். இத்தோடு வாராந்தம் சனிக்கிழமைகளில் பிற்பகல் 4:00 மணியளவில் காந்தி பூங்காவில் கலையாக்க நிகழ்ச்சிகளினூடாக நியாயத்தின் தேவையினையும் அரசியல், பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கான பரிந்துரைகளையும் மேற்படி நபர்கள் பரிமாறி வருகிறார்கள். இந்த வாராந்த ஆற்றுகையும் ஒன்று கூடலும் நியாயக் கிராமம் என்று பெயரிடப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களாக கிழக்கில் பால்நிலைப் பாராபட்சங்களுக்கு எதிராகவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வரும் பெண்களுக்கு ஆதரவாகவும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் செயலாற்றிக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், இளந்தலைமுறையினர் எனப்பலரும் இச்செயற்பாட்டில் பங்கெடுத்து வருவதனைக் காண முடிகின்றது.

உலக வரலாற்றில் அடக்கு முறைகளுக்கு எதிரான, ஆக்கபூர்வமான மாற்றங்களுக்காக துாரநோக்குடன் போராடிய பல்வேறு செயற்பாட்டாளர்களும் நடப்பதனை ஒரு போராட்ட வழிமுறையாகக் கைக்கொண்டுள்ளமையினை அறிய முடிகின்றது. வரலாற்றில் பல ஆளுமைகள் நடந்து நடந்து தமது நோக்கங்களைப் பரவலாக்கிஅதனை வலிமைப்படுத்தி வந்துள்ளமை பற்றி நிறையவே கற்றறிய முடிகின்றது. உதாரணமாக காலனித்துவ ஆதிக்கத்தை எதிர்த்து அகிம்சை வழிமுறையில் போராடிய காந்தியின் தண்டி யாத்திரை, சர்வாதிகார மன்னராட்சியை அகற்றுவதற்காகப் போராடிய மாவோவின் நீண்ட பயணம் என்பவை புகழ்பெற்றவை. இதேபோல் பல பெண் ஆளுமைகள் நடையூடாகத் தமது போராட்டங்களை ஆக்கபூர்வமாக முன்னகர்த்தி சாதித்துள்ளமை பற்றியும் நிறையவே அறிய முடிகின்றது.

இன்று எண்ணிறந்த சவால்களுக்கு மத்தியில் வாழும் நாம் பொழுது போக்கு என்கிற பெயரில் ஆதிக்க ஊடக வணிகத்தின் நுகர்வுக்குள் அகப்பட்டுள்ள பின்புலத்தில் ஆக்கபூர்வமாகச் சிந்தித்து புத்தாக்கச் சிந்தனைகளுடன் ஆதிக்க ஒடுக்கு முறைகளுக்கு எதிராக எதிர்வினையாற்றி நியாயமாக வாழ்வதற்கான சமூக பண்பாட்டை நோக்கி நடைபோடும் நியாயக் கிராமத்தின் தேவைகளை உரையாடுவோம். அதுகுறித்து அக்கறை கொள்ளுவோம்.

தொடர்ச்சியான நடை! இவர்கள் ஏன் நடக்கிறார்கள்? எதனைக் கேட்கிறார்கள்? என்ற கேள்விகளை அவற்றை அவதானிப்பவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. தொடர்ச்சியான ஆழ்ந்த அவதானம் ஊடாக அவர்கள் கேட்பதுவும் கூறுவதுவும் நமக்கானது, எமது எதிர்கால சந்ததிகளின் நல்வாழ்வுக்கானது, நாம் கேட்க வேண்டிய ஆனால் கேட்காது மௌனங் காத்து வரும் விடயங்கள் தான் இவை, என்பதை உணரச் செய்கின்றது. அவை நிராகரிக்க முடியாதவை என்பதை ஆழ் மனதில் வேரூன்றச் செய்கின்றது. அதற்கான தார்மீக ஆதரவை வழங்கத் துாண்டுகின்றது. வன்முறைத் தன்மையற்று மௌனங் களைந்து நாமும் போராட முடியும் என்பதற்கான உந்துதலை ஏற்படுத்துகின்றது.

அதனாலேயே நியாய நடை என்பது ஆள் சேர்க்கும் செயற்பாடாகவன்றிஆட்களின்அகத்தைஅகலிக்கும், ஆழமாக யோசிக்கச் செய்யும் சிறியதொரு வலிமைமிக்க எத்தனமே ஆகும் என்கிறார்கள். இது திடீரெனப் பிரகாசித்து மங்கி மழுங்கிவிடக் கூடிய உணர்ச்சி வயப்பட்ட மக்கள் எழுச்சியைச் செய்யும் போராட்டமாகக் கருதப்பட முடியாதது. மாறாக திறனாய்வு மனப்பாங்குள்ள சிந்திக்கும் திறன் பெற்ற வெகுமக்களை வலுவாக்கஞ் செய்யும், அர்த்தபுஸ்டியான சனநாயகப் பண்பாட்டை ஆழ வேரூன்றச் செய்வதற்கான மௌனப் போராட்ட வடிவமாக மேற்கிளம்பி நிற்கின்றது.

சனநாயக சமூகத்தில் சாதாரணர்களின் கருத்துக்களைப் பகிர்வதற்கான வெளிகளை உருவாக்கும் போராட்ட ஆற்றுகையாக நியாய நடையும், நியாயக் கிராமத்தின் இயக்கமும் இடம்பெற்று வருகின்றன. குரலற்றோருக்கான குரல் என்பதனுள் மறைந்து நிற்கக்கூடிய ஆதிக்கத்தை நீக்கி குரலற்றவர்கள் எனப்படுபவர்கள் தத்தமது குரல்களை ஓங்கி ஒலிப்பதற்கான வாய்ப்புக்கள் இக்கிராமத்தின் கலையாக்க நடவடிக்கைகளுடாக வலுவாக்கஞ் செய்யப்பட்டு வருகின்றன. பாடல்கள், காண்பியக் கலையாக்கங்கள், பங்குகொள் நிலையிலான காண்பிய உருவாக்கங்கள், ஆற்றுகைகள், கலந்துரையாடல்கள் எனப்பல்வேறு கலையாக்க வழிமுறைகளுடாக நியாயக் கிராமத்தின் ஆற்றுகை வெளி பல்பரிமாணங் கொள்வதால் இது வலுவாகி வருகின்றது.



இன்று எண்ணிறந்த சவால்களுக்கு மத்தியில் வாழும் நாம் பொழுது போக்கு என்கிற பெயரில் ஆதிக்க ஊடக வணிகத்தின் நுகர்வுக்குள் அகப்பட்டுள்ள பின்புலத்தில் ஆக்கபூர்வமாகச் சிந்தித்து புத்தாக்கச் சிந்தனைகளுடன் ஆதிக்க ஒடுக்கு முறைகளுக்கு எதிராகஎதிர்வினையாற்றிநியாயமாகவாழ்வதற்கான சமூக பண்பாட்டை நோக்கி நடைபோடும் நியாயக் கிராமத்தின் தேவைகளை உரையாடுவோம். அதுகுறித்து அக்கறை கொள்ளுவோம்.

**து.கௌரீஸ்வரன்.**